**Previous Examination date – 12.08.2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 190 of 2019**

**Deposition of Witness P.W.4**

**Name : டாக்டர்.முகைதீன் நவ்சாத் Father/Husband's Name : சையது முகமது மசூது கனி**

**Village :** **Taluk :**

**Caste :** **Calling :**

**Religion :** **Age :**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 18.02.2026.**

**A1 present. A2, A3 absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.10.2018ம் தேதி பகல் 1.50 மணியளவில் பணியில் இருந்தபோது 40 வயது பூமதி என்பவர் தன்னை தனது வீட்டில் வைத்து தெரிந்த மூன்று நபர்கள் கத்தியால் அன்று மதியம் 12.15 மணிக்கு தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு

(1) இடது உள்ளங்கையில் 2x4 செ.மீ. அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது.

(2) இடது முழங்காலில் வலி இருந்ததாக கூறினார்.

அவரை உள்நோயாளியாக சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரை மேல் சிகிச்சைக்காக 03.11.2018ம் தேதி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த பின்பு அவர் சிகிச்சை குறித்த தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கருத்து தெரிவிக்க இயலவில்லை என்று சான்று வழங்கினேன்.

2. பின்னர் பூமதி என்பவருடன் வந்த அவரது கணவர் 50 வயது அய்யன்சாமி என்பவர் பகல் 2.00 மணியளவில் சிகிச்சைக்கு வந்தபோது அவர் தன்னை தனது வீட்டில் வைத்து தெரிந்த மூன்று நபர்கள் கத்தியால் அன்று மதியம் 12.15 மணிக்கு தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு

(1) மூக்கில் வலி இருந்தது.

(2) வலது இடுப்பில் வலி இருந்தது.

அவரை உள்நோயாளியாக சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என சான்று வழங்கினேன். **பூமதி என்பவரின் விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. அய்யன்சாமி என்பவரின் விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. பூமதி மற்றும் அய்யன்சாமி ஆகியோரை மயில்சாமி என்பவர் தான் மருத்துவமனையில் சேர்த்தார் என்று அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பூமதி என்பவர் மதியம் 12.50க்கு மருத்துவமனையில் சேர்ந்ததாக அ.சா.ஆ.3ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 1.50 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காயம்பட்ட இருவரையும் யார் யார் அடித்தார்கள் என்று பெயர் குறிப்பிட்டு அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4ல் இல்லை என்றால் சரிதான். மேற்படி காயங்கள் தடுமாறி கீழே விழும் போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் ஆமாம். எந்த போலிசார் எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள், நேரம் ஞாபகமில்லை. போலிசார் கேட்டு கொண்டதால் காயச்சான்று வழங்கினேன் என்றால் இல்லை, நடைமுறையில் உள்ளதால் வழங்கினேன்.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.02.18 17:52:08 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.